**<u>கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,</u>**

**<u>விருதுநகர் மாவட்டம் (இருப்பு) ஸ்ரீவில்லிபுத்தூர்.</u>**

POP. No:64/2019 நாள்: 15.09.2025

மசா.1, திருமதி.ஜெயலட்சுமி

**மசா.1 மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் 1, 2 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி செய்யப்படுகிறார்–**

அசல் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். எனக்கு படிக்க தெரியாது அசல் மனுவை தாக்கல் செய்துகொள்ள வழக்கறிஞருக்கு நான் தான் தகவல் சொன்னேன் தயார் செய்து வழக்கறிஞர் படித்து காண்பித்தார். மனுவில் நான் என்ன பரிகாரம் கேட்டுள்ளேன் என்றால் சொத்தில் எங்களுக்கு பங்கு வேண்டும் என்று சொல்லி கேட்டுள்ளோம். நான் தாக்கல் செய்துள்ள அசல் மனுவில் சொல்லியுள்ள சொத்தின் பேரில் நான் பரிகாரம் கோரும் போது அதற்கு 2 முதல் 4 பரிகாரங்களை பொறுத்து என்னால் நீதிமன்ற முத்திரை கட்டணத்தை செலுத்த இயலவில்லை என்றும் அதனால் எங்களை வறியவர்களாக விளம்புகை செய்யவேண்டி நான் மனுவில் சொல்லியுள்ளேனா என்று கேட்டால் பரிகாரம் என்ற இடத்தில் நீதிமன்ற முத்திரை கட்டணத்தை செலுத்தஇயலவில்லை என்று சொல்லவில்லை ஆனால் மனுவில் பாரா 10ல் மனுதாரர் / வாதிகளுக்கு நீதிமன்ற கட்டணம் செலுத்துவதற்கு எவ்வித வசதியும் இல்லை என்றும் எனவே மனுதாரர்களை வறியவர்களாக அங்கீகரிக்க வேண்டும் என்று சொல்லியுள்ளேன். 1ம் எதிர்மனுதாரர் 2ம் எதிர்மனுதாரருக்கு 12.07.2017ம் தேதி 3ம் எதிர்மனுதாரர் அலுவலகத்தில் பதிவு செய்து கொடுத்துள்ள அடமான கடன் பத்திர நகலை நான் இந்த மனுவில் தாக்கல் செய்யவில்லை. நான் மனுவில் சொல்லியுள்ள குடியிருப்பு விலாசத்தில் கண்ட வீடு எனக்கு சொந்தமானது என்று சொன்னால் எனக்கு சொந்தமாக வீடு எதுவும் இல்லை. நான் இந்த முகவரியல் உள்ள வீட்டில் வாடகைக்கு குடியேறியுள்ளேன். அந்த வீடானது ஒரு சைக்கிள் கடை வைத்துள்ள ஸ்டீபன் என்பவருக்கு சொந்தமானது. மாத வாடகை ரூ.3000/–. என் கணவர் என்னோடு வசித்து வரவில்லை. அவருக்கும் எனக்கும் கடந்த 20 ஆண்டு காலமாக சேர்ந்து வாழ்ந்துவரவில்லை. விவாகரத்து மனு தாக்கல் செய்து அதில் உத்தரவாகி அவர் கோவில்பட்டியிலும் நான் செவல்பட்டியிலும் தனித்தனியாக வசித்து வருகிறோம் .நான் என் கணவருக்கு எதிராக ஜீவனாம்சம் கோரி எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை. நான் என் கணவரிடமிருந்து விவாகரத்து பெற்று செல்லும் போது ரூ.80,000/–யை என் கணவரிடம் இருந்து வாங்கிக்கொண்டேன் என்று சொன்னால் அப்படி ஏதுவும் இல்லை. நான் தற்பொழுது கூலி வேலை பார்க்கிறேன். மாதம் ஒன்றுக்கு எனக்கு ரூ.3000/– முதல் ரூ.3500/– வரை வருமானம் கிடைக்கும். 2ம் மனுதாரர் மனோரஞ்சிதம் அருப்புக்கோட்டையில் வசித்து வருகிறார் அவரின் திருமணத்தின் போது 5 பவுன் நகை சீதனமாக போடப்பட்டது என்றால் அப்படியில்லை என் அப்பா அவருக்கு 3 பவுன் நகை தான்போட்டார். 2ம் மனுதாரரான என் தங்கையின் கணவர் வேலை பார்க்கிறார். அவர் ஓட்டுநராக வேலை பார்த்து மாதம்

ரூ.10,000/- முதல் ரூ.15,000/-ம் வரை சம்பாத்தியம் செய்கிறார் என்றால் அவ்வளவு தொகை இல்லை. எங்களுக்கு தாயார் சொத்து என்று எதுவும் இல்லை. 13.03.2017 ல் நானும் என் சகோதரியும் சேர்ந்து என் தாயார் சொத்தை காளீஸ்வரி என்பவருக்கு கிரைய செய்து கொடுத்துவிட்டோம் என்றும்அதற்கான ஆவணம் 346/2017 என்று உள்ளது என்றால் எங்கள் தாயாருக்கு சொத்து எதுவும்இல்லை நாங்களும் கிரைய ஆவணமாக எழுதிக்கொடுக்கவில்லை. எனக்கும் என் சகோதரிக்கும் திருமணம் சமயத்தில் செய்து வைக்கப்பட்ட சீர், நகைகள் அனைத்தும் எங்கள் கை வசம் தான் உள்ளது என்று சொன்னால் அது சரியல்ல. நீதிமன்றகட்டணம் செலுத்துவதற்கு வசதி உள்ளது என்றும் நாங்கள் மனுவை தவறாக காரணம் காட்டி சொல்லியுள்ளோம் என்றால் சரியல்ல. மனுவை தள்ளுபடி செய்யப்படவேண்டியது என்று சொன்னால் அது சரியல்ல.

**<u>மறுவிசாரணை –</u>** இல்லை.

சாட்சியின் கையொப்பம்

**Name of the Interpreter : Not necessary**
Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969 on the 15th day of September 2025.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு. தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரி என ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் செய்யப்பட்டது.

கூடுதல் மாவட்ட நீதிபதி,
கூடுதல் மாவட்ட நீதிமன்றம்,
ஸ்ரீவில்லிபுத்தூர்.